குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 2

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபு | ஜாதி | |
| தந்தை பெயர் | மாதையசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.24 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. Kanagaraj present for A1. Advocate Mr. A.Nagenthiran present for A2. APP Mr.P.Suresh present.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. சம்பவம் நடந்த பின்பு மாலை சுமார் 04.15 மணிக்கு போன் மூலம் எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் சரி. அ.சா.1 கொடுத்த புகாரை நான் படித்து பார்க்கவில்லை. அ.சா.ஆ–1 புகாரில் சம்பவம் 05.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. சம்பவம் நடப்பதற்கு 45 நிமித்திற்கு முன்னதாக அ.சா.1 எனக்கு பொய்யான தகவல் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 நகையை எதிரிகள் திருடவில்லை என்றாலும். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

2. அ.சா.1 நகைகளை வேறு இடத்தில் தொலைத்துவிட்டு பொய்யான புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் அடையாளம் காட்டிய போது தான் முதல் முறையாக பார்த்தேன் என்றால் சரி.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. (1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது மேலும் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்கிறது.) சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. அ.சா.1 எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.30 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.